பக்கங்கள்: 06

# காலைக்கதிர்
Kalaikkathir

விழுயல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 04 புதன்கிழமை 18.06.2025 கதிர் 221

## இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆட்சியைப் பிடிப்பதில் அதிர்ஷ்டம் உள்ள தரப்புக்கள் என்றால் அது அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் தேசிய மக்கள் சக்தி என்கிற ☞ 2

## மாகாணத் தேர்தலுக்கான நாளை ஆளும்தரப்பு அறிவிக்கவேண்டும்

### சாணக்கியன் நாடாளுமன்றில் கோரிக்கை

மாகாண சபைத் தேர்தலுக்கான நாளை ஆளும்தரப்பு உறுதியாக அறிவிக்க வேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் வலியுறுத்தினார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய உரையில் இது தொடர்பாகத் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படும் வரையில் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் வகையில் தனிநபர் பிரேரணை ஒன்றை நான் கொண்டு வந்தேன். இந்தப் பிரேரணையை ஆளும்தரப்புப் பிரேரணையாகக் கருதி, சட்டத்திருத்தத்தை உடனடியாக நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். ஆகவே மாகாண சபைத் தேர்தலை நடத்தும் நாளை ஆளும்தரப்பு உறுதியாக அறிவிக்க வேண்டும் - என்றார்.

## கொழும்பில் ஏற்பட்ட தோல்வியே வெளிநடப்புக்குக் காரணமாம்

### புதுக் கதை சொன்ன பாதுகாப்பு துணை அமைச்சர்

கொழும்பு மாநகர சபையின் தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாமல்தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தைப் புறக்கணித்தனர் என்று பொதுப் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரத் துணை அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

விளையாட்டுகளில் ஊக்கமருந்து தடுப்பு வரைவு மசோதாவின் விதிமுறைகள் மீதான விவாதத்தின் ☞ 2

## மாகாண சபைத் தேர்தல் தீர்க்கமான முடிவு இல்லை

### முதலில் அபிவிருத்தி பின்னரே தேர்தல் அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல்விட்டு மிக நீண்ட காலமாகிவிட்டபோதும் அதனை நடத்துவதற்கு ஆளும் என்பிபி தரப்பு எந்தத் தீர்க்கமான முடிவையும் இதுவரையில் எடுக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாட்டில் மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் 3 பிரதான தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. தற்போது நாட்டின் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே அவற்றுக்கு முன்னுரிமையளித்து அதன் பின்னரே மாகாணசபைத் தேர்தல் குறித்து தீர்மானிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து, அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவித்தபோது இதனைத் தெரிவித்தார்.

''மாகாணசபைத் தேர்தல்கள் குறித்து உறுதியான தீர்மானமொன்று எடுக்கப்படவில்லை. சுமார் 8 மாத காலப்பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்றத் ☞ 6

## ஆளும்தரப்பின் போக்கை எதிர்த்து

# நாடாளுமன்றத்தில் இருந்து எதிர்க் கட்சிகள் வெளிநடப்பு

நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்வில் இருந்து முதன்மை எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல எதிர்க் கட்சிகள் வெளிநடப்புச் செய்தன. மேலதிக கேள்விக்கு அனுமதி மறுக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே எதிரக்கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறினர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன எதிர்க்கட்சி பேச்சாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஆளும் கட்சிக்கு சாதகமாக செயல்படுகிறார் என்று அவர்கள் குற்றஞ்சாட்டினார்.

ஈரான்- - இஸ்ரேல் மோதல் மற்றும் இலங்கை மீதான அதன் தாக்கம் குறித்து பேச எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேரம் கோரியபோது பதற்றம் அதிகரித்தது.

ஒத்திவைப்பு நேரத்தில் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்கப்படும் என்று அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ எதிர்க்கட்சி ☞ 2

## வதந்திகளின் அடிப்படையில் ஆளும்தரப்புச் செயற்படாது

### மண்டைதீவு மனிதப் புதைகுழி குறித்த சிறீதரனின் கேள்விக்கு நீதி அமைச்சர் பதில்

மண்டைதீவில் உள்ள மனிதப் புதைகுழி குறித்து தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் வெளியிட்ட தகவல்கள் வதந்திகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவை என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன தெரிவித்தார். இப்படிப்பட்ட வதந்திகளின் அடிப்படையில், சரியான தகவல்கள் இல்லாமல் அரசு இவற்றின் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மண்டைதீவில் இடம்பெற்ற படுகொலைகளுடன் ஈபிடிபியினருக்குத் தொடர்பு இருப்பதாகவும் அது ☞ 2

## எதிர்க்கட்சி உறுப்பினர்களை கட்டுப்படுத்தும் பொறுப்பு அவர்களின் தலைவருக்கு உண்டு

### சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

எதிர்க்கட்சியின் ஒருசில உறுப்பினர்களின் கீழ்த்தரமான நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சி தலைவருக்கு உண்டு. அவ்வாறு செயற்படாவிடின் அவர் பதவியில் இருப்பது பயனற்றது. எவ்வாறு இருப்பினும் அவரையே எதிர்க்கட்சித் தலைவராக வைத்துக் கொள்வோம் எனச் சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மேலதிக கேள்விக்கு அனுமதி மறுக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சியின் ☞ 2

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் செம்மணிக்கும் சென்றாகவேண்டும்

### சர்வதேச அமைப்புகள் வலியுறுத்து

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்க்கெர் டேர்க் தனது இலங்கைப் பயணத்தின்போது உள்நாட்டு போர் மீறல்களுடன் தொடர்புபட்ட செம்மணி மனித புதைகுழி போன்றவற்றையும் ஜேவிபி கிளர்ச்சி காலத்தைய மனிதப் புதைகுழிகளையும் பார்வையிட வேண்டும் என சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் மனித உரிமைகளுடன் தொடர்புபட்ட சர்வதேசத்தவர்கள் அனைவரும் முள்ளிவாய்க்காலிற்கு சென்று போரின் இறுதி அட்டுழியங்களின் எச்சங்களைப் பார்வையிடவேண்டும். அதன் மூலம் ஆளும்தரப்பு அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றதை ஏற்றுக்கொள்ள அழுத்தம் தரவேண்டும், அதற்கு தீர்வு காணவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம் என்ற செய்தியை பாதிக்கப்பட்டவர்களிற்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் ☞ 2

## இலங்கையர் நால்வர் இஸ்ரேலில் காயம்

இஸ்ரேல் நடத்திய தாக்குதலிற்குப் பதிலடியாக ஈரான் நடத்திவரும் தாக்குதல்களில் 4 இலங்கையர்கள் காயமடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 5.00 மணி நிலவரப்படி, காயமடைந்தவர்களின் உடல்நிலை சீராக இருப்பதாகவும், வரும் நாட்களில் அவர்கள் மீண்டும் பணிக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் இலங்கை தூதர் நிமல் பண்டாரா தெரிவித்தார்.

'கூடுதலாக, மேலும் இரண்டு இலங்கையர்கள் தற்காலிகமாக அவர்களது வீடுகளில் இருந்து ☞ 2

## கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் வழிகாட்டுதல் ஓகஸ்ட் வெளிவரும்

ஆளும்தரப்பு 2026 தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ள புதிய கல்வி மாற்ற முயற்சி தொடர்பில் ஓகஸ்ட் 2025இல் அதன் அதிகாரப்பூர்வ வழிகாட்டுதல்களை வெளியிடும் என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

மஹரகமவில் உள்ள தேசிய கல்வி நிறுவனத்தில் (ஹிணூசி) நேற்று நடைபெற்ற கூட்டத்தின் போது இது குறித்து விவாதிக்கப்பட்டதாக பிரதமர் அமரசூரிய கூறினார், சீர்திருத்தங்களை செயல்படுத்துவதற்கும் அதற்கேற்ப ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கும் ☞ 2

## பலாலி வீதியில் 7 மணிவரை போக்குவரத்து

யாழ்ப்பாணம் பலாலி வீதி பொதுமக்கள் போக்குவரத்திற்காக திறக்கப்படும் நேரம் மாலை ஏழு மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் காலை 6 மணிமுதல் மாலை 5 மணிவரையாக இருந்த இந்த போக்குவரத்து நேரம் 2 மணி ☞ 2

## இனி இது .....

என்பிபியும்தான்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சாவகச்சேரி நகர சபையை அதிர்ஷ்டத்தின் மூலமே வென்றது. தமிழ் அரசுக்கும் அதற்கும் சமமான வாக்குகள் கிடைத்த பின்னர் திருவுளசீட்டு மூலம் காங்கிரஸிற்குச் சாதகமான முடிவு கிடைத்தது. தவிசாளர், உபதவிசாளர் ஆகிய இரு தெரிவுகளிலும் அதிர்ஷ்டம் அவர்கள் பக்கமே இருந்தது.

அதேபோன்று, தெஹியோவிட்ட பிரதேச சபைத் தலைவர் தேர்தலில் 17—17 என்ற கணக்கில் நேற்று இரு தரப்புகளுக்கும் தேக்க நிலை ஏற்பட்டது, இருந்தாலும் தேசிய மக்கள் சக்தி (NPP) கட்சிக்கு ஆதரவாக சமனசிறி வீரசிங்க வெற்றி பெற்றார், இதன் மூலம் உயர் பதவியைப் பெற்றார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பொதுஜன பெரமுனவின் (SLPP) தமிது ஷமிந்தவை எதிர்கொண்டார், இரு வேட்பாளர்களும் சமமான ஆதரவைப் பெற்றனர். கடைசியில் திருவுளச் சீட்டில் அதிர்ஷ்டம் என்பிபி பக்கமே இருக்கின்றது. கடந்த வாரம் மடகம பிரதேச சபையிலும் இதுபோன்றே என்பிபிக்கு அதிர்ஷ்டம் அடித்தது.

தெற்கில் என்பிபி வடக்கில் தமிழ் காங்கிரஸ். இரண்டுக்கும் எங்கேயே ஒரே காற்று வீசுகின்றது போலும்.

.....................................

தீவகம் மற்றும் கோப்பாய் தவிர ஏனைய இடங்களில் தமிழ் அரசுக் கட்சியைத் தோற்கடிப்பதன் மூலம் இப்போதுள்ள அதன் தலைமையை வீழ்த்தப் போடப்பட்ட சதித் திட்டத்தைப் பற்றி நேற்று இந்தப் பத்தியில் விவரித்திருந்தேன். அந்தச் சதியினால் ஓரளவிற்கு வெற்றியும் தோல்வியும் சம பங்குக்குக் கிடைத்திருக்கின்றன என்றே தெரிகிறது.

தமிழ் அரசுக்கு ஈபிடிபியிடம் இருந்து கிடைக்கும் ஆதரவை இல்லாமலாக்குவதே இந்தச் சதியின் அடிப்படை நோக்கம். அதன் மூலம் தமிழ் அரசு யாழ்ப்பாணத்தில் சபைகளைக் கைப்பற்றுவதைத் தடுக்கும் அதேநேரம், தீவகத்திலும் கோப்பாயிலும் காங்கிரஸ் மற்றும் ஜனநாயகக் கூட்டணியுடன் சேர்ந்து ஆட்சியைப் பிடிப்பதன் மூலம், தாம் கொள்கை உள்ளவர்கள் என்றும் தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய தலைவர், செயலாளர் ஆகியோர் கொள்கையற்றவர்கள் என்ற வகையில் சித்தரித்து தலைமையை வீழ்த்து இந்தச் சதியின் அடிப்படை நோக்கம். இதற்கு தமிழ்த் தேசியச் சாயம் பூசப்பட்டது.

ஆளும்தரப்புடன் ஒட்டியிருந்த ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் ஆகியன செய்யாத பாரதூரமான குற்றங்கள் எவற்றையும் ஈபிடிபி செய்துவிடவில்லை. (எல்லோரும் செய்தவைகள் மனித குலத்திற்கு எதிரான மிக மோசமான குற்றங்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை) 2009 வரையும் அரசு தரப்புடன் இறுதிப் போர் வரையில் ஒன்றாக இருந்து குற்றமிழைத்தவர்கள், 2010இல் அரசுடன் செயற்படுவதை நிறுத்திவிட்டதனால் மன்னிக்கப்படுவார்களானால், 2024 வரையும் அரசோடு சேர்ந்தியங்கிய ஈபிடிபியை 2025இல் மன்னிப்பதற்கு இந்தத் தரப்புகளுக்கு என்ன நியாயம் இல்லாமல் போனது என்று தெரியவில்லை.

அரசியல் இருந்து முன்னர் விலகிய ஒட்டுக்குழுவினர் அனைவரையும், தான் தமிழ் அரசின் தலைவரானதும் மீண்டும் ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீண்டும் உருவாக்குவேன் என்று அறிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு, அதிலிருந்த மூன்று முன்னாள் ஒட்டுக்குழுக்களையும் மன்னிக்க முடியுமானால், பின்னால், மிக அண்மையில் அரசியலிருந்து விலகிய ஈபிடிபியை மன்னிக்க முடியாமல் இருப்பது அல்லது தேவைக்காக அதனோடு சேர்ந்தியங்க முடியாமல் இருப்பது ஏனோ என்பதை அவர்தான் வெளிப்படுத்தவேண்டும்.

மண்டைதீவில் இருக்கும் புதைகுழியை தோண்டும்படி கேட்கும் சிறீதரன், அசோகா ஹோட்டல் படுகொலைகள், வவுனியாவில் உள்ள பல புதைகுழிகள் குறித்தெல்லாம் விசாரிக்கக் கேட்பதில்லை. பருத்தித்துறையில் அப்பாவி இளைஞரைக் கொன்று அவரது தலையை வெட்டி எடுத்து வந்து யாழ். நகரத்தில் எறிந்த கொடூரம் குறித்து விசாரிக்கக் கேட்பதற்கு மனம்வரவில்லை. புளொட்டின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக இந்தத் தலைவெட்டுச் சம்பவம் இடம்பெற்றது என்று அப்போது தெரிவிக்கப்பட்டது.

அப்படி அவரது அரசியல் தேவைக்கு ஏற்ப சில ஒட்டுக்குழுவினரைத் தனது தோழர்களாக ஏற்க முடிவது போலவே கட்சியும் சிலரைத் தேவைக்கு ஏற்ப சேர்ப்பதும் விலக்குவதும் அரசியல் என்கிற அறிவு இருந்திருந்தால் அவர் இப்போது கட்சித் தலைவராகக் கோலோச்சியிருக்க முடியும் என்பதை அவரும் அவருடன் சேர்ந்தியங்குபவர்களும் புரிந்துகொள்வது நல்லது.

எப்படியிருந்தாலும் தீவகத்தில் கருக்கட்டிய சதித் திட்டம் ஈபிடிபியினருக்குள் ஓரளவிற்கு குழப்பத்தைஏற்படுத்தியுள்ளது. அந்தவரையில் அவர்களின் சதி வெற்றி பெற்றுள்ளது. கரவெட்டி நகரசபையில் இந்தக் குழப்பத்தின் அறுவடைய தமிழ் காங்கிரஸ் நேற்று பெற்றுக்கொண்டது என்கிற தோற்றமும் இருக்கிறது. அங்கு தமிழ் காங்கிரஸ் பெற்றிருக்கவேண்டிய ஆசனங்களைவிட ஒரு வாக்கு அதற்கு அதிகமாகக் கிடைத்தது. அந்த ஒரு வாக்கு யாருடையது என்பது விசாரிக்கப்படவேண்டிய ஒன்று. இதற்கான டீல் முன்கூட்டியே இருந்த காரணத்தால்தான் அங்கு இரகசிய வாக்கெடுப்பை தமிழ் காங்கிரஸ் கேட்டது என்பதும் தெளிவு. அந்த வகையில் தீவகத்துச் சதி ஓரளவிற்கு வெற்றி பெற்றுள்ளது.

மறுபுறத்தில் இவர்கள் முற்கூட்டியே ஆலாபரணம் பண்ணியதால் சுதாகரித்துக்கொண்ட கட்சித் தலைமை தீவக உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அனைவரையும் நேற்று அழைத்து நிலமையைப் புரியவைத்து, கட்சிக்கு முரணாகச் சென்றால் உறுப்பினர் பதவிகளைக் காப்பாற்ற முடியாது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. அதை அடுத்து அவர்களும் கட்சி தலைவர்களின் முடிவுக்கமையவே தாம் நடப்போம் என்று சத்தியம் செய்திருக்கின்றனர். ஆனாலும் இத்துடன் இந்தச் சதி முடிவடையாது. இரகசிய வாக்கெடுப்பு என்கிற ரீதியில் தொடரவே செய்யும். எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிர்க்குச் சகுணம் பிழைத்தால் சரி என்ற வகையில் கட்சி தோற்றா-லும் எத்தகைய பின்னடைவுகளைக் கண்டாலும் பரவாயில்லை, நாம் மட்டும் வாழ்ந்தால் போதுமானது என்று செயற்படுகிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்தவோ, வெளியேற்றவோ வக்கற்றிருக்கும் தலைமை அதில் இருப்பதும் இல்லாதிருப்பதும் கூட ஒன்றுதான்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாடாளுமன்றத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களுக்கு உறுதியளித்தார், மேலும் மாலையில் அயலுறவுத்துறை அமைச்சகம் ஓர் அறிக்கையை வெளியிடும் என்றும் கூறினார்.

இருப்பினும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எதிர்க்கட்சி கொறடாவுக்குப் பேசுவதற்கான வாய்ப்பை சபாநாயகர் மறுத்தார் எனவும், அவருக்குப் பேசும் உரிமை மறுக்கப்பட்டதாகவும் கூறினார்.

'இந்த சபையில் உங்கள் நடத்தையை நாங்கள் இனி ஏற்றுக்கொள்ளமாட்டோம்,' என்று பிரேமதாச கூறினார், சபாநாயகர் எதிர்க்கட்சியை இப்படியே நடத்தினால், அதன் உறுப்பினர்கள் சபையை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்றும் கூறினார்.

சபாநாயகர் பிமல் ரத்நாயக்க குற்றச்சாட்டுகளை மறுத்தார், மேலும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையைக் கண்காணிப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு அதிக பொறுப்பு உள்ளது என்றார்.

எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்தபோதும், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தனது கட்சியின் பிரதிநிதியாக அவையில் தங்கி விவாதத்தில் பங்கேற்கத் தீர்மானித்திருக்கிறார் என்று அறிவித்தார். எனினும் எதிர்க்கட்சியினரின் முடிவைத்தான் ஆதரிக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார். பேசும் உரிமை கட்டுப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான சம்பவங்களை மேற்கோள் காட்டி, எதிர்க்கட்சிகளின் புறக்கணிப்புக்கு ஆளும்தரப்பு பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

''பிரதான எதிர்க்கட்சி சபை வெளிநடப்பு செய்துள்ள வேளையில், எமது மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து விசேட அவதானம் செலுத்தி அவற்றை சுட்டிக்காட்டவுள்ளோம். பிரதான எதிர்க்கட்சி சபையில் இருந்து வெளிநடப்பு செய்துள்ளமைக்கு ஆளும்கட்சி பொறுப்புக்கூறவேண்டும்'' என்றார் அவர்.

எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் உரையாற்றுவதற்கு போதுமான காலவகாசம் வழங்கப்படுவதில்லை. ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் அல்லது சபை முதல்வர் எழுந்தவுடன் அவர்கள் உரையாற்றுவதற்கு சபாநாயகர் அனுமதியளிக்கிறார், ஆகவே பிரதான எதிர்க்கட்சியின் வெளிநடப்பு நியாயமானதே என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வதந்திகளின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து ஆளும்தரப்பு விசாரிக்கவேண்டும் என்றும் நீதி அமைச்சரிடம் வலியுறுத்தினார். அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு ஆகிய பகுதிகளில் பிடித்துச் செல்லப்பட்டுக் காணாமற்போனவர்கள் தொடர்பில் உறவினர்கள் ஈபிடிபி முகாமிற்குச் சென்று அவர்களை விடுவித்துத்தருமாறு கேட்டபோது, அவர்களை விசாரித்துவிட்டுவிட்டுவிடுவார்கள் என்று ஈபிடிபியினர் பதிலளித்துள்ளனர், எனவே இந்தப் படுகொலைகளில் இவர்களுக்கும் தொடர்பிருக்கின்றது, அவர்களையும் விசாரிக்கவேண்டும் என்றார் சிறீதரன்.

நிலையியல் கட்டளை 27/2 இன்படி நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்சன நாணயக்காரவிடம் வடக்கு மனிதப் புதைகுழிகள் தொடர்பான இந்த வாய்மொழி மூல விடைக்கான வினாக்களை முன்வைத்திருந்தார் சிறீதரன்.

அதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர், சரியான தகவல்கள் இல்லாமல் வதந்திகளின் அடிப்படையில் தமது ஆளும்தரப்பு செயற்படாது என்றார்.

## பலாலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தால் நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்தார்.

பாதை திறக்கப்படும் நேரத்தை அதிகரிக்குமாறு மக்கள் தன்னிடம் முன்வைத்த கோரிக்கையை தான் அரசுத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார் என்றும் அவர் படையினருடன் பேசி அதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கல்வி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான நடவடிக்கைகள் குறித்து நேற்றைய கூட்டம் கவனம் செலுத்தியது என்றும் கூறினார்.

பின்வரும் சீர்திருத்தங்கள் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டு 1 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கு புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

2028 ஆம் ஆண்டு 10 ஆம் வகுப்புக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

புதிய பாடத்திட்டத்தின் கீழ் முதல் க.பொ.த. சாதாரண தரத் தேர்வு 2029ஆம் ஆண்டு நடைபெறும்.

9 ஆம் வகுப்பு முதல் தொழிற்கல்வி அறிமுகப்படுத்தப்படும்.

சீர்திருத்த செயல்முறைகள், பாடத்திட்ட திருத்தம், ஆசிரியர் பயிற்சி, உள்கட்டமைப்பு மற்றும் நிர்வாகம், முறையான மதிப்பீட்டு வழிமுறைகள் மற்றும் பொது ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் இருக்கும் என்றார் பிரதமர்.

இந்த மாற்றத்திற்கு நன்கு தயாராக இருக்கும் ஆசிரியர்களை உருவாக்குவது தேசிய கல்வி நிறுவகத்தின் பொறுப்பு என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை முறையான மதிப்பீட்டுக் கட்டமைப்பின் மூலம் தொடர்ந்து கண்காணித்து மதிப்பீடு செய்வதை உறுதி செய்யுமாறும் பிரதமர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

## இலங்கையர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேற்றப்பட்டனர், மேலும் அவர்களின் முதலாளி அவர்களுக்கு மாற்றுத் தங்குமிட ஏற்பாடுகளைச் செய்துள்ளார். இலங்கை தூதரக ஊழியர் ஒருவரின் வீட்டிற்கும் சொத்து சேதம் ஏற்பட்டது, ஆனால் அவர் காயமடையவில்லை,' என்று தூதுவர் கூறினார்.

ஈரான் இஸ்ரேல் மீது நடத்திய ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் ஞாயிறு பிற்பகல் தொடங்கி இரவு முழுவதும் தொடர்ந்ததாக இலங்கை தூதர் கூறினார்.

'கணிசமான எண்ணிக்கையிலான ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் இடைமறித்து அழிக்கப்பட்டாலும், டெல் அவிவ், ஹைஃபா மற்றும் ஜெருசலேம் உட்பட பல மக்கள் எண்ணிக்கை அடர்த்தியான பகுதிகள் குறிவைக்கப்பட்டன,' என்று அவர் கூறினார்.

## ஐ.நா. மனித ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கவேண்டும் என ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்க்கெர் டேர்க்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் சர்வதேச அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் உள்ள பலவந்தமாக காணாமலாக்கப்படுதலால் பாதிக்கப்பட்டவர்களை சந்தியுங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதியளித்தபடி அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டும், என பகிரங்கமாக வேண்டுகோளை அவர் பகிரங்கமாக விடுக்கவேண்டும் எனவும் சர்வதேச அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க தலைமையிலான இலங்கையின் ஆளும்தரப்பு தேர்தலிற்கு முன்னர் புதிய வாக்குறுதிகளை வழங்கியபோதும், அதிகாரத்திற்கு வந்த பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அரசியல் உறுதிப்பாட்டை சிறிதளவுகூட வெளிப்படுத்தவில்லை என சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்க்கெர் டேர்க்கிற்கு அவரது இலங்கை பயணம் குறித்து எழுதியுள்ள கடிதத்தில் சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகள் இதனை தெரிவித்துள்ளன. முன்னைய ஆளும்தரப்பின் அயலுறவுக் கொள்கைகளையே இதுவரை அநுரகுமார திசநாயக்கவின் ஆளும்தரப்பும் பின்பற்றி வருவதாக சர்வதேச அரசசார்ப்பற்ற அமைப்புகள் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுமுள்ளன.

## மாகாண ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் என்பன நடத்தப்பட்டுள்ளன.

தற்போது மக்கள் எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய செயற்படவேண்டியுள்ளது. நவம்பரில் வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இவ்வனைத்துக் காரணிகளையும் அடிப்படையாகக்கொண்டு தான் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான காலம் தீர்மானிக்கப்படும். அதற்கு முன்னர் இதனுடன் தொடர்புடைய சட்ட திருத்தங்களையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது" - என்றார் அவர்.

## எதிர்க்கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறினர். அதையொட்டி எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

நாடாளுமன்றத்தில் சண்டித்தனமாகச் செயற்படுவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது. நாடாளுமன்றத்தின் கௌரவம் மற்றும் கோட்பாடுகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆளும்தரப்புக்கு உண்டு. மிளகாய் தூள் தாக்குதல் நடத்த இடமளிக்க முடியாது.

எதிர்க்கட்சிகளின் ஒருசில உறுப்பினர்களின் கீழ்த்தரமான செயற்பாடு மற்றும் நடத்தைகள் வெறுக்கத்தக்கது. இவ்வாறான செயற்பாடுகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் தனிக் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை அவர் கட்டுப்படுத்த வேண்டும் அவ்வாறு செய்யாவிடின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அவர் இருப்பது முறையாக இருக்காது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் வைத்துக் கொள்வோம். நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஒழுக்கமான முறையில் நடத்துவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபைக்கு நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பு அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். உள்ளூராட்சி ஆணையர் உட்பட அனைத்து அரசு இயந்திரங்களையும் பாதுகாப்பதாகக் கூறிய துணை அமைச்சர், உள்ளூராட்சிச் சட்டத்தின்படி ஆணையர் சட்டப்பூர்வமாகச் செயல்பட்டார் எனவும் கூறினார்.

# மூத்தோரின் நிலையான வைப்புக்களுக்கு மூன்று சதவீத வட்டி அதிகரிப்புக்கு அனுமதி

## வாக்குறுதியளிக்கப்பட்ட 15 சதவீதம் கிடைக்கவில்லை

வயதில் மூத்தவர்களின் நிலையான வங்கி வைப்புக்களுக்கான வட்டி வீதத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. 'விசேட நிலையான வைப்புத் திட்டம்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தத் திட்டத்திற்கு திங்கட்கிழமை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த தெரிவித்தார்.

மூத்தோரின் நிலையான வங்கி வைப்புக்களுக்கு 15 சதவீத வட்டி வழங்கப்பட்டு வந்தது. எனினும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் இந்த வட்ட வீதம் குறைப்பட்டு சாதாரண வட்டி வீதமாக்கப்பட்டது. அதனை மீண்டும் 15 சதவீதமாக்குவோம் என்று தேசிய மக்கள் சக்தி தேர்தலின்போது வாக்குறுதியளித்தது. அதற்கமைய 2025 வரவு செலவுத் திட்டத்தில் மூத்தோரின் வங்கி வட்டி அதிகரிக்கப்படும் என்று முன்மொழியப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் வங்கிகளில் உள்ள மூத்தோரின் நிலையான வைப்புக்களுக்கு 3 சதவீத வட்டி அதிகரிப்பு வழங்க இப்போது அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதனடிப்படையில் மூத்தோரின் வைப்புக்களுக்கு வங்கிகளில் 10 முதல் 1–0.5 சதவீத வட்டி கிடைக்கும் நிலையே ஏற்பட்டுள்ளது. இது ஆளும்தரப்பு வாக்குறுதியளித்த 15 சதவீத வங்கி வட்டியைவிடக் குறைவாகும்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக அரசுத் தலைவர் அநுரகுமார வட்டி அதிகரிப்பிற்கான முன்மொழிவை அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

அதற்கமைய 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கையர்கள், 2025.07.01 தொடக்கம் 2025.12.31 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளும் நிலையான வைப்புக்களுக்கு வட்டி வீதம் உயர்த்தப்படவுள்ளது.

நிலையான வைப்புக் காலம் 12 மாதங்கள் (ஓராண்டு) ஆவதுடன், உயர்ந்தபட்ச வைப்புப் பெறுமதி ஒரு மில்லியன் ரூபாவாகும்.

"சராசரி நிறையிடப்பட்ட நிலையான வைப்பு வட்டி வீதத்திற்கு மேலதிகமாக வருடாந்த வட்டி வீதம் 3 சதவீதத்தை சேர்த்துக் கிடைக்கின்ற பெறுமதி அல்லது குறித்த வங்கியால் வெளியிடப்படும் நிலையான வைப்பு வட்டி வீதத்துடன் 3 சதவீதத்தை சேர்த்துக் கிடைக்கின்ற பெறுமதி அல்லது இரண்டில் அதிகமுள்ள வட்டி வீதத்தை செலுத்த" அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இந்த வட்டிச் சலுகையைச் செலுத்துவதற்காக 30 பில்லியன் நிதியொதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.




## பாதுகாப்பு அலுவல்கள் நாடாளுமன்றக் குழு அநுர தலைமையில் நேற்றுக் கூடி ஆராய்வு

பாதுகாப்பு அலுவல்கள் அமைச்சுசார் ஆலோசனைக் குழு பாதுகாப்பு அமைச்சர் கௌரவ அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையில் நேற்று நாடாளுமன்றத்தில் கூடியது.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை நிறுத்த கடற்படையின் உதவியைப் பெறுதல், வடக்கு மற்றும் கிழக்கில் காணிகளை விடுவிப்பது தொடர்பான பிரச்சினைகள் போன்ற பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். அதன்படி, நியாயமான கோரிக்கைகளை பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை அரசுத் தலைவர் வழங்கினார்.

பாதுகாப்பு கௌரவ பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) அருண ஜயசேகர, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொந்தா, முப்படைகளின் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## நாடாளுமன்ற ஓய்வூதிய சட்டங்களை நீக்கும் யோசனைக்கு அனுமதியளிப்பு

நாடாளுமன்ற ஓய்வூதிய சட்டங்களை இரத்து செய்வதற்கு முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போதைய ஆளும்தரப்பால் தேர்தலுக்கு முன்னர் வெளியிடப்பட்ட 'வளமான நாடு அழகான வாழ்வு' கொள்கை அறிக்கையின்படி, முன்னாள் அரசுத் தலைவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட சிறப்புரிமைளை இரத்துச் செய்வதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 5 வருடங்களுக்குப் பின்னர் வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்குமாக இந்த அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1986ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க அரசுத் தலைவரின் உரித்துக்கள் சட்டம் மற்றும் 1977ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்ற ஓய்வூதியச் சட்டங்களை நீக்குவதற்காக 2 சட்டமூலங்களைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

புதிய சட்டங்கள் நிறைவேற்றப் பட்டதும் தற்போதுள்ள முன்னாள் ஜனாதிபதிகள் அனைவரது சலுகைகளும் நிறுத்தப்படும். அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் உள்ளிட்ட சிறப்புரிமைகளும் நீக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இந்தத் தருணத்தை பயன்படுத்தலாமே!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர் ஆணையர் இலங்கைக்கு நேற்று வருகை தந்தார். இந்த வருகை, இனப் போருக்குப் பிந்தைய நீண்டவுடைவான தீர்வு தேடலில் ஒரு முக்கியமான கட்டமாக பார்க்கப்படுகிறது. கடந்த இரண்டு தசாப்தங்களாகவும், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குநீதிகிடைக்கவில்லைஎன்றகுற்றச்சாட்டு தொடர்ந்தும் நிலவுகின்றது. காணாமல் போனோர், சிறை வைப்புகள், சட்டவிரோத மரணங்கள், சீரற்ற காணி அபகரிப்புகள், தொடரும் இராணுவக் கட்டுப்பாடு என பல அம்சங்கள் இன்னும் விடை பெறாத வினாக்களாகவே உள்ளன.

உலகத் தரத்தில், இலங்கை கடந்த காலங்களில் பல தடவைகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களில் குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுத்துள்ளது. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்தின் மீது இருந்தும், அந்த உத்திகளைஆழமாகசெயல்படுத்தும் உண்மையான முனைப்பே காணப்படவில்லை. மாறாக, கடந்த காலங்களிலேயே அரசாங்கம் இதுபோன்ற சர்வதேச அழுத்தங்களை 'உள்நாட்டுப் பிரச்சனைகளில் தலையீடு' எனக் கூறி கழந்து கொண்டதுதான் பழக்கம்.

ஆனால், இந்த ஆளும்தரப்பே தற்போது சர்வதேச அங்கீகாரத்திற்கும், முதலீட்டிற்கும் கடுமையாக நாடிக்கொண்டு இருக்கிறது. அதற்காகவேபொருளாதாரஉறவுகளைமேம்படுத்தும் நோக்கில் ஐ.மு.நா. உட்பட பல அமைப்புகளுடன் நெருக்கமாக பணியாற்றும் நோக்கமும் உள்ளது. இந்த சூழ்நிலையில்தான் மனித உரிமைகள் உயர் ஆணையரின் வருகை ஏற்படுகிறது. இதை ஒரு சவாலாக மட்டும் அல்லாமல், ஒரே நேரத்தில் ஒரு வாய்ப்பாகவும் அரசாங்கம் பார்க்க வேண்டியுள்ளது.

இலங்கை அரசு இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டும். சர்வதேசத்தில் நம்பிக்கை நிலைநாட்டும்ஒருவாய்ப்பாகவும், உள்நாட்டில்நியாயம் வழங்கும்திட்டத்தோடும்செயல்படவேண்டும்.காணாமல் போனோருக்கான சுயாதீன விசாரணைகள், transitional justiஉள நடைமுறைப்படுத்தும் திட்டங்கள், மற்றும்இராணுவத்தின்பன்னிரண்டாவது ஆண்டாக நீடிக்கும் நிலதபைப்புகள் குறித்த நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டிய நேரம் இது. சுமார் 75 வருடங்கள் கடந்துவிட்ட பிறகும், ஒரே நாட்டில் இரு சமுதாயங்கள் வெவ்வேறு நம்பிக்கைகளில் வாழும் நிலை தொடரக் கூடாது. ஐ.நா. வருகை, இந்த வேறுபாடுகளைப் பொருத்துவதற்கான ஒரு அரிய சந்தர்ப்பமாகும்.

இப்போது கூட அரசு பொறுப்புடன் நடந்துகொள்ளாவிடில், அந்த அமைதியின் வாய்ப்பு இன்னும் ஒருமுறை தவறவிடப்படும்.

# முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தீயணைப்பு சேவை நிலையம் இல்லை

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

வன்னியில் முல்லைத்தீவு மற்றும், மன்னார் மாவட்டங்களில் தீயணைப்பு சேவை நிலையம் ஒன்றுகூட இதுவரை நிறுவப்படவில்லை என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டினார். கடைத்தொகுதிகளும் வீடுகளும் பற்றி எரியும் போது வாளிகளில் நீர் அள்ளி ஊற்றும் எமது அவல வாழ்வில் இந்த அரசு பேசும் சமத்துவம் எங்கே உள்ளது எனவும் கேள்வி எழுப்பினார்.

இந்த இரு மாவட்டங்களிலும் உடனடியாகத் தீயணைப்புப் பிரிவுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நாடாளுமன்றஉறுப்பினர்வலியுறுத்தியுள்ளார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய உரையில் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பாக வாழுதல் நாட்டில் வாழும் அனைவருக்குமான உரிமை. நாட்டில் உள்ள 25 மாவட்டத்தினருக்கும் சமத்துவ அடிப்படையில் கிடைக்கப்பட வேண்டிய வசதி.

சமத்துவ அடிப்படையிலான வள பரவலாக்கத்தை கொள்கை அளவில் வலியுறுத்தும் இந்த அரசு, வன்னி மாவட்டத்திற்கு சமத்துவ வளப்பகிர்வை மேற்கொள்வீர்களா என்பதே எனது கேள்வி.

வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவிலும் மன்னாரிலும் இதுவரை ஒரு தீயணைப்பு சேவை நிலையம்கூட இல்லை. நெடுங்காலமாகப் போரின் வடுக்களைச் சுமந்து வாழும் மக்களை முற்றுமுழுதாகக் கொண்ட மாவட்டம் முல்லைத்தீவு. மக்களையும் கால காலமாகச் சேர்த்த சொத்துகளையும் இழந்த பின்னர், இப்போது மெல்ல மெல்ல மண்ணையும் கூட இழந்துவருகிறோம்.

இந்த அரசின் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான அண்மைய அபிவிருத்தித் திட்டங்களை நாம் வரவேற்கிறோம். அத்தோடு இன்னமும் தீராதுள்ள எங்களின் அத்தியாவசிய தேவைகளை விரைவாக நிறைவேற்றித்தரவேண்டியதும்ஆளும்தரப்பின் கடமை என்பதையும் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

எம் மக்களின் இருப்புக்கும் நிலையான வளர்ச்சிக்கும் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றானதீயணைப்பு சேவையை விரைவாக முல்லைத்தீவிலும் மன்னாரிலும் நிறுவுங்கள்.

கடைத்தொகுதிகளும் வீடுகளும் பற்றி எரியும் போது வாளிகளில் நீர் அள்ளி ஊற்றும் எங்கள் அவல வாழ்வில் நீங்கள் பேசும் சமத்துவம் எங்குள்ளது? போரில் அனைத்தையும் இழந்து வெறுங்கையோடு சொந்த ஊர் மீண்டு சிறுகச்சிறுக சேர்த்த சொத்துகள் எல்லாம் தீயில் எரியும்போது கிளிநொச்சியில் இருந்தோ வவுனியாவில் இருந்தோ தீயணைப்பு ஊர்திகள் வந்து சேரும்வரை எரிகிற நெருப்பு காத்திருக்குமா?

2024ஆம் ஆண்டின் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவின் படி அண்ணளவாக 1,22,542 மக்கள் முல்லைத்தீவில் வாழ்கின்றனர்.

இவர்களும் இந்த நாட்டின் மக்கள் தாம். இந்த நாட்டில் மற்ற குடிமக்களைப் போல எம் மக்களுக்கும் அதே அளவிலான பாதுகாப்பு தேவை.

ஒரு தீ விபத்து, பல ஆண்டுகால கடின உழைப்பை அழித்து குடும்பங்களை மீண்டும் வறுமையில் தள்ளும்.

கடும் வரட்சியை எதிர்நோக்கும் மாவட்டங்களுள் முல்லைத்தீவு ஒன்று. வரட்சி, தீ விபத்துகளின் அபாயத்தை கணிசமாக அதிகரிக்கும். காட்டுத்தீ விரைவாகவும் கட்டுப்பாடில்லாமலும் பரவி இயற்கைக் காடுகளையும் விவசாய நிலங்களையும் வீட்டு மரங்களையும் அச்சுறுத்துகிறது.

கடும் வரட்சியால் பனை மரங்கள் தீப்பற்றி எரிகின்றன. காடுகள் தீப்பற்றி பல ஏக்கர்கள் எரிந்து அழிந்து போகின்றன. 160,000 கெக்டேயர் இயற்கைக் காடுகளைக் கொண்ட முல்லைத்தீவில் 2024 இன் படியான புள்ளிவிபரத்துக்கு அமைவாக 647 கெக்டேயர் இயற்கைக் காடுகள் அழிந்துள்ளன.

இவற்றைவிட, மின்னொழுக்குகளால் கடைகள் தீப்பற்றி எரிகின்றன. நாயாறு, கொக்கிளாய் பகுதிகளில் வாடிகள்கூட தீப்பற்றி முற்றாக எரிந்து அழிந்துள்ளன. பகல் நேரங்களில் ஏற்படும் தீப்பற்றல்களைவிட இரவு நேரம் ஏற்படும் தீப்பற்றல்களால் அழிவுகள் அதிகம்.

இது ஒரு புதிய பிரச்சினை அல்ல. முல்லைத்தீவில் தீயணைப்பு சேவையை ஏற்படுத்துங்கள் என்ற கோரல் இந்த சபைக்குள்ளும் வெளியேயும் பலமுறை எழுப்பப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு முன்னாள் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில்அப்போதையபிரதமர்முல்லைத்தீவில் ஒரு வாரத்திற்குள் தீயணைப்புப் படை நிறுவப்படும் என்று உறுதியளித்ததை இச்சபையில் நினைவுகூர்கிறேன்.

இப்போது ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன. இப்போதும் இந்த அடிப்படை சேவைக்காக, சமத்துவத்துக்காக நாங்கள் கேட்டுக்கொண்டே இருக்கின்றோம். முல்லைத்தீவில் தீ விபத்து ஏற்பட்டால், அருகில் உள்ள தீயணைப்புப்பிரிவு வவுனியாவில் இருந்து சுமார் 80 கிலோ மீற்றர் பயணிக்கவேண்டும்.

சாலை நிலைமைகள் மற்றும் ஏனைய சவால்களைக் கருத்தில் கொண்டால் இரண்டு மணிநேரம் அல்லது அதற்கும் மேலான பதிலளிப்பு நேரத்தை இது குறிக்கிறது. தீ விபத்து ஏற்பட்டால் கடக்கின்ற ஒவ்வொரு நொடியும் முக்கியமானது.

வவுனியாவில் இருந்தோ கிளிநொச்சியில் இருந்தோ உதவி வரும் நேரத்திற்குள் விலைமதிப்பற்ற உயிர்கள், சொத்துகள், வாழ்வாதாரங்கள் என அனைத்தும் இழக்கப்படலாம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒருதீயணைப்புப்பிரிவேனும்இயங்குவதற்கு இங்குள்ள ஒவ்வொருவரும் குரல் கொடுங்கள்.

பாதுகாப்பாக வாழும் உரிமை நாட்டில் உள்ள அனைவர்க்கும் சமன் என்பதற்காக குரல் கொடுங்கள். மீண்டுவரும் முல்லைத்தீவு மீள மீள அழிவுக்கு உள்ளாகாது இருக்க குரல் கொடுங்கள்.

தீயணைப்பு சேவைகளை நிறுவுதல் ஆடம்பர வசதியல்ல. மாறாக அது பேரம் பேசமுடியாத ஒரு கட்டாயத்தேவை. எனவே இந்த நாடாளுமன்றம், உடனடியாகவும் தீர்க்கமானதாகவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் பணிவுடனும் உறுதியுடனும் கேட்டுக்கொள்கின்றேன். உறுதிமொழிகளுக்கு அப்பால் செயற்பாட்டு அடிப்படையில்இதற்கானஇணக்கப்பாட்டை ஏற்படுத்துங்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்பு நிலையத்தை நிறுவுவதற்கு முன்னுரிமை கொடுங்கள். முல்லைத்தீவில் மற்றொரு பேரழிவு, தீ விபத்து ஏற்படும் வரை காத்திருக்கவேண்டாம்.

பாதுகாப்பான வாழ்வில் எந்தவொரு மாவட்டமும் பின்தங்கி இருக்கக்கூடாது என்பதை உறுதிசெய்வது நமது கூட்டுப்பொறுப்பு என்றார்.

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722



# முல்லை ஓய்வு நகர்
## Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்










முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்









4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.06.2025இல் வெளியிடப்பெற்றது